முதல்வர்– கழகத் தலைவர் அறிவுரைப்படி

# நாடாளுமன்றத் தொகுதி வாரியாக நிர்வாகிகள் கூட்டம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது!

## முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு -ஆர்.எஸ்.பாரதி - எ.வ.வேலு - தங்கம் தென்னரசு பங்கேற்றனர்!

சென்னை, பிப்.6-

நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், 22-01-2024 அன்று மாலை 5.00 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதில் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனவரி 21 அன்று சேலத்தில் நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணி 2-வது மாநில மாநாட்டில் எழுச்சியுரையாற்றும்போது முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகளான பொறுப்பு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட / மாநகர / பகுதி / ஒன்றிய / நகர / பேரூர் கழகச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் மண்டலக்குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள், நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றியக்குழுத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் உள்ளிட்ட "நிர்வாகிகள் சந்திப்பு" சென்னை, அண்ணா சாலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் 2024 ஜனவரி 24 முதல் பிப்ரவரி 5ஆம் தேதி வரை நடைபெற்றது.

இதில் கிருஷ்ணகிரி, திருவள்ளூர், சேலம், கோவை, நீலகிரி, திருப்பூர், நாமக்கல், ஈரோடு, பொள்ளாச்சி, தருமபுரி, சிவகங்கை, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, மதுரை, தேனி, இராமநாதபுரம், கடலூர், சிதம்பரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், வேலூர், அரக்கோணம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வடசென்னை தென் சென்னை, மத்திய சென்னை, திருபெரும்புதூர், திருவண்ணாமலை, ஆரணி, பெரம்பலூர், திருச்சி, கரூர், திண்டுக்கல்,காஞ்சிபுரம், புதுச்சேரி ஆகிய நாடாளுமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட பொறுப்பு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட / மாநகர / பகுதி / ஒன்றிய / நகர / பேரூர்க் கழகச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் மண்டலக்குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள், நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றியக்குழுத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்களை என மொத்தம் 3,405 பேர்கலந்து கொண்டனர். இதில் 617 பேர் மகளிர் நிர்வாகிகள்.

இந்நிர்வாகிகள் சந்திப்பு 2024 ஜனவரி 24 முதல் பிப்ரவரி 5ஆம் தேதி வரை தினந்தோறும் காலை, மாலை என இரு வேளையிலும் நடைபெற்றது.

இச்சந்திப்புகளில் தலா இரண்டு தொகுதிகளில் அடங்கியுள்ள நிர்வாகிகளை தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என். நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு ஆகியோர் கள நிலவரம், வெற்றி வாய்ப்பு, தேர்தல் பணி ஆகியவை குறித்து ஆலோசனை நடத்தினர்.

அமைச்சர் ஆர்.காந்தி வழங்கினார்!

# திருவள்ளூர் மாவட்டத்தில் 3,138 பேருக்கு இலவச வீட்டு மனைப் பட்டா!

## திருத்தணி எஸ்.சந்திரன் - ஆ.கிருஷ்ணசாமி - வி.ஜி.ராஜேந்திரன் பங்கேற்பு!

திருவள்ளூர், பிப்.06

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டத்தில் 3,138 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்களை அமைச்சர் ஆர்.காந்தி வழங்கினார். ஆ.கிருஷ்ணசாமி, திருத்தணி எஸ்.சந்திரன், வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு 2023 ஜுன் மாதம் முதல் 2024 ஜுன் மாதம் வரை நடைபெறுவதை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 100 இடங்களில் சிறப்பு பட்டா முகாம்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி சிறப்பு பட்டா முகாம்கள் நடைபெற்றது.

இதில் திருவள்ளூர் மாவட்டத்திற்குட்பட்ட திருவள்ளூர், பூவிருந்தவல்லி மற்றும் ஆவடி, மதுரவாயல் சட்டமன்ற தொகுதிகள் முழுவதும் நடத்தப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு 1538 பயனாளிகளுக்கு கீழ்கண்டவாறு பட்டா வழங்கும் விழா கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தியால் துவக்கி வைக்கப்பட்டு பட்டா வழங்கும் விழா நடைபெற்றது.

இதில் பூவிருந்தவல்லி வட்டத்தில் பட்டா மாறுதல் 80 பயனாளிகளுக்கும், பட்டா மாறுதல் (உட்பிரிவு) 120 பயனாளிகளுக்கும் மற்றும் ஆவடி வட்டத்தில் பட்டா மாறுதல் 50 பயனாளிகளுக்கும், பட்டா மாறுதல் (உட்பிரிவு) 250 பயனாளிகளுக்கும் மற்றும் திருவள்ளூர் வட்டத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா 1038 பயனாளிகளுக்கும் ஆக மொத்த 1538 பயனாளிகளுக்கு மற்றும் திருவள்ளூர் மாவட்டத்திற்குட்பட்ட திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி முழுவதும் நடத்தப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு 1600 பயனாளிகளுக்கு கீழ்கண்டவாறு பட்டா வழங்கும் விழா கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு பட்டா வழங்கும் விழா நடைபெற்றது.

இதில் திருவள்ளூர் வட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை பட்டா 748 பயனாளிகளுக்கும், இலவச வீட்டு மனைப்பட்டா 852 பயனாளிகளுக்கும், மொத்தம் 1600 பட்டாகள் வழங்கப் பட்டது.

உடன் மாவட்ட ஆட்சியர் பிரபு சங்கர், சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, எஸ்.சந்திரன், வி.ஜி. ராஜேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.ராஜ்குமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் கே.வி.ஜி. உமா மகேஸ்வரி,

மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் டி. தேசிங்கு, திருவள்ளூர் வருவாய் கோட்டாச்சியர் ஜவண்ணன், நகராட்சி குழு தலைவர்கள் உதயமலர் பாண்டியன், காஞ்சனா சுதாகர், ஒன்றிய குழு தலைவர் எம்.ஜெயக்குமார், துணை தலைவர்கள் சி.சு. ரவிச்சந்திரன், பரமேஸ்வரி கந்தன், ஒன்றிய செயலாளர்கள் ஆர்.ஜெயசீலன், எஸ். மகாலிங்கம் மற்றும் அரசு துறை அலுவலர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஸ்பெயின் நாட்டிற்குச் சென்று திரும்பும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சென்னை விமான நிலையத்தில் நாளை பிரம்மாண்டமான வரவேற்பு!

## மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் திரண்டு வருவீர்! மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

சென்னை, பிப்.6-



தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஸ்பெயின் நாட்டிற்கு சென்று நாளை 7ஆம் தேதி காலை வெற்றிகரமாக தாயகம் திரும்பும் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு சென்னை விமான நிலையத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது என்றும் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அனைவரும் அலைக்கடலேன திரண்டு வந்து கழக கொடியேந்தி உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும் என்று மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கைவருமாறு:-

தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஸ்பெயின் நாட்டிற்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஸ்பெயின் நாட்டில் உள்ள பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகளை நேரில் சந்தித்து தமிழ்நாட்டில் தங்களது தொழில் முதலீடுகளை மேற்கொள்ள வலியுறுத்தி உள்ளார்.

தமிழ்நாட்டில் புதிய தொழில் தொடங்குவதற்காக ஸ்பெயின் நாட்டில் உள்ள பல்வேறு தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் செய்துள்ளார்.

குறிப்பாக சரக்கு முனையங்கள் மற்றும் சரக்குகளை கையாளும் பூங்காக்களை அமைப்பதில் உலகளவில் முன்னணி நிறுவனமான ஹைபக் லாய்டு நிறுவனத்துடன் 2,500 கோடி ரூபாய் முதலீட்டில், 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திடும் வகையில் தூத்துக்குடி மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் தளவாட வசதிகள் அமைத்திட புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இது போன்று ஸ்பெயின் நாட்டில் உள்ள பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகளை சந்தித்து தமிழ்நாட்டில் புதிதாக தொழில் தொடங்க முன்வரும் படியும் முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

இப்படி பல்வேறு தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை நிறைவேற்றி தமிழ்நாட்டு முதல்வர் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நாளை 7ஆம் தேதி காலை 7ஆம் தேதி காலை 8.00 மணியளவில் தாயகம் திரும்புகிறார்.

தமிழ்நாட்டில் புதிய தொழில்களை தொடங்க தொழில் முதலீடுகளை ஈர்த்துவிட்டு வெற்றிகரமாக நாளை 7ஆம் தேதி காலை சென்னை விமான நிலையத்தை வந்தடையும் தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விமான நிலைய முன்பு காஞ்சி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பிரமாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மாபெரும் தொழில் புரட்சியை செய்து வரும் தொழில் புரட்சி நாயகர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வரவேற்பு அளிப்பது "நமது கடமை, நமது உரிமை" என்ற அந்த உணர்வோடு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத் தோழர்கள் அனைவரும் தமது கரங்களில் கழகத்தின் இருவண்ண கொடிகளையும், வரவேற்பு பதாகைகளையும் ஏந்தி, மேள தாளம், பேண்ட் வாத்தியம் முழங்க மிகவும் கோலாகலமான முறையில் எழுச்சியான வரவேற்பு அளித்திடும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.



சென்னை, ராஜா அண்ணாமலைபுரம், தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் கலை பண்பாட்டுத் துறை சார்பில் நேற்று (05.02.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் யுனெஸ்கோ அமைப்பு சென்னையை இசை நகரமாக அறிவித்தமையைக் கொண்டாடும் வகையில் நடைபெற்ற சென்னை இசை விழாவில் கலந்துகொண்டு ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு கலைச் செம்மல் விருதுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் சே.ரா.காந்தி, இ.ரெ.பா.ப,தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் எஸ். சௌமியா, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன், கலை பண்பாட்டுத் துறை இணை இயக்குநர் திருமதி க. சிவசௌந்திரவல்லி ஆகியோர் கலந்து கொண்டனர்.


